## தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2017

---

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுத் திறைசேரிச் செயலாளர், கமத்தொழில், காணி மற்றும் வன வள அமைச்சின் செயலாளர், தாவரவியல் பூங்கா பணிப்பாளர், பொதுத் திறைசேரியின் பாதீட்டுப் பணிப்பாளர் மற்றும் கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இடையே 1996 திசெம்பர் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் (4)(ஜே) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. விரிவான அறிக்கை தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் தலைவருக்கு 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தாவரவியல் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளுக்காக ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதி அதன் முக்கியமான பகுதிகளுக்காக ஒதுக்கி அந்த ஒவ்வொரு பகுதிகள் வெவ்வேறாக பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் இந்நிதியத்தின் காணி மேம்படுத்தலுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 21,125,089 தொகை உட்பட ரூபா 231,614,009 கூட்டுத்தொகைக்காக பெறுமானத்தேய்வு நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்காக தயார்படுத்தப்பட்ட நிலைமைக்கு வந்ததன் பின்னர் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுகின்ற போதிலும், அதற்கு புறம்பாக கொள்வனவு செய்யபட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படாமல் கைதவிர்க்கப்படும் ஆண்டில் முழு ஆண்டிற்குமே பெறுமானத்தேய்வு செய்யப்படும் கொள்கையொன்று நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) கம்பஹா தாவரவியல் பூங்காவின் நிர்மண ஒப்பந்தத்துக்கு உரித்தாக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,738,476 ஆன முற்பணத்தொகை மீளாய்வாண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக தொடர்ந்தும் முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 பெப்ரவரி 14 ஆந் திகதிய 95/3010/105/221 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் தாவர பூங்காக்களின் வருடாந்த நுழைவுச் சீட்டு வருமானத்தில் 25 சதவீதம் தாவர பூங்கா நிதியத்திற்கு வருமானமொன்றாக ஒதுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தால் கிடைத்த

மொத்த நுழைவுச் சீட்டு வருமானம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்கிலிடப்பட்ட 25 சதவீத வருமானத்தை விட திறைசேரியால் வழங்கப்படுகின்ற கட்டுநிதி குறைவாக இருப்பதன் காரணமாக நிதியத்தினால் அவ்வேறுபாடு பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 171,988,473 கிடைக்க வேண்டிய கணக்கு மீதியொன்று உருவாகியிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2014 திசெம்பர் 29 ஆம் திகதிய 25/2014(i) ஆம் இலக்க திருத்திய பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 யூன் 23 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பிரகாரம் செயல் நிமித்த சேவை அடிப்படை என்ற எடுகோளைக் கருத்திற் கொண்டு தொழிலாளர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது ரூபா 14,519,023 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காகச் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 134,504,012 மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 152,235,357 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 17,731,345 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. நுழைவுச்சீட்டு வருமானம் ரூபா 10,824,703 ஆல் அதிகரித்திருந்த போதிலும் கட்டிடத் திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினம், தொழிலாளர் செலவினம், மலர்ச் சங்க செலவினம், மலர் வளர்ப்பு செலவினம் (ரோயல் பூங்கா) மற்றும் பாதுகாப்பு செலவினம் என்பன முறையே ரூபா 2,110,993 ஆலும் ரூபா 4,907,717 ஆலும் ரூபா 5,402,316 ஆலும் ரூபா 6,081,025 ஆலும் ரூபா 7,750,236 ஆலும் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய தாவரவியல் ஆய்வுகூடத்தின் உலர் மாதிரிகளுக்காக பாகோட் லேபல் இடும் செயற்பாட்டிற்காக 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 887,402 செலுத்தி பார்கோட் லேபல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தேவையான ஏனைய உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக கணக்காய்வு திகதியான 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் அவற்றை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது.

(ஆ) நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட சேவை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், சட்டரீதியற்ற நிதியங்களை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு கூடிய வகையில் உரிய காரணங்களை குறிப்பிட்டு அரச நிதி திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியம் சட்டமொன்றின் மூலம் சட்டமாக்குவதற்காக 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) தாவரவிய பூங்கா பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 240,000 கொடுப்பனவு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாமல் 2008 திசெம்பர் 01 திகதிய நிதியத்தின் செயலாளரின் நியமனக் கடிதத்தின் பிரகாரம் நிர்வாக உதவியாளர் பதவிக்காக, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டு வருடாந்தம் கால நீடிப்பு வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். மீளாய்வாண்டில் அந்த உத்தியோகத்தரின் வயது 71 ஆகக் காணப்பட்டதுடன் தாபன விதிக்கோவையின் பிரகாரம் அரச உத்தியோகத்தருக்குரிய விடுமுறை உரித்தும் அந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட நலிவுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கொடுப்பனவுக் கட்டுப்பாடு | i. நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்தல், பரீட்சித்தல், இடம் பெற்றிருக்கவில்லை.<br>ii. முற்பணத் தீர்ப்பனவின் போது உரிய பற்றுச் சீட்டுக்களின் மூலப் பிரதிகளுக்குப் பதிலாக நிழற்பட பிரதிகள் பொறுப்பேற்கப்பட்டு உரிய தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | மனிதவள முகாமைத்துவம் | பதவியணியிரை ஆட்சேர்த்தல், கடமை கையளிப்பு மற்றும் மேற்பார்வை வேலைத் திட்டங்கள் முறையாக இடம்பெறாமை. |
| (இ) | கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறும் சந்தர்ப்பங்களிலேயே உரிய பேரேடுகளில் பதிவு செய்யப்படாமை. |